

த

# தமிழகப் பறவை ஆர்வலர்கள் சந்திப்பு
# *2017*

# Tamil birders meet
# 2017

தமிழ்Birds

Flyers used for Tamil Birders Meet 2017.




Front - Golden-fronted leafbird Back - Oriental scops owl | Photos: Surendhar Boobalan Logo by Boopathy Srinivasan



Photo: Rama Neelamegam

# Content


| | |
|---|---|
| Agenda (in Tamil) | 1-2 |
| Agenda (in English) | 3-4 |
| Minutes (in Tamil) | 5-8 |
| Minutes (in English) | 9-10 |
| Feedback from participants | 11-12 |
| Media Coverage | 13 |
| Report on Vulture Recovery Plan discussion | 14-15 |
| Recovery plan for Vultures of Tamil Nadu (Draft) | 16-27 |
| Group photo of the Participants | 28 |
| Team information | 29 |
| List of participants | 30 |


# பொருளடக்கம்


| | |
|---|---|
| நிகழ்ச்சிநிரல் (தமிழ்) | 1-2 |
| நிகழ்ச்சிநிரல் (ஆங்கிலம்) | 3-4 |
| கூட்ட நடவடிக்கை சுருக்கக் குறிப்பு (தமிழ்) | 5-8 |
| கூட்ட நடவடிக்கை சுருக்கக் குறிப்பு (ஆங்கிலம்) | 9-10 |
| பங்குபெற்றோர் கருத்துக்கள் | 11-12 |
| செய்திகளில்... | 13 |
| பாறு கழுகுகளை மீட்டெடுக்கும் செயல்திட்டம் கலந்துரையாடல் அறிக்கை | 14-15 |
| தமிழ் நாட்டிலுள்ள பாறு கழுகுகளை மீளமைக்கும் செயல் திட்டம் (வரைவு அறிக்கை) | 16-27 |
| பங்குபெற்றோர் நிழற்படம் | 28 |
| கூட்ட ஒருங்கிணைப்பாளர்கள் குழு விவரம் | 29 |
| பங்குபெற்றோர் பட்டியல் | 30 |

# தமிழகப் பறவை ஆர்வலர்கள் சந்திப்பு, 21 - 22 அக்டோபர் 2017

ஒய். எம். சி. ஏ. முகாம், ஏலகிரி, வேலூர் மாவட்டம்

**முதல் நாள் நிகழ்ச்சிகள் 10:30  19:30**

**வரவேற்புரை……………………………………………………………கே.வி. சுதாகர்**

**சிறப்புரையும் தமிழகப் பறவைகள் குறுங்கையேடு வெளியிடுதலும்……..திரு. தியடோர் பாஸ்கரன்**

**தமிழ்நாட்டின் பறவைப் பட்டியல்…………………………………………ஜார்ஜ் டாம், V. சாந்தாராம்**

**தமிழ்நாட்டில்:**
**பறவைகள் பார்க்கப்படாத இடங்கள்,**
**நகர்ப்புறப் பறவைகள் கணக்கெடுப்பு**
**பறவைகளுக்கான முக்கியப் பகுதிகளை கண்காணித்தல்…………..சுஹேல் காதர்**

**பறவைக் கவிதைகள்……………………………………………………ஆசை**

**தமிழ்நாட்டில் பறவை நோக்கலை அதிகரிக்க**
**என்ன செய்யலாம்?…………………………………………………S.V. கணேஷ்வர்**

**தமிழ் நாட்டின் அழியும் விளிம்பில் இருக்கும் பறவைகள் யாவை?**
**வட்டார சிவப்புப் பட்டியல் தயாரிப்பு…………………………………V. சாந்தாராம், S. சுப்ரமணியா**

**இணை கூட்டத்தொடர்**

**பறவைகளை வரைவோம் ……………………………………………அபிஷேகா கிருஷ்ணகோபால்**
**பறவை கைப்பாவை செய்தல்…………………………………………R. பானுமதி**
**உங்களது eBird தகவலை பகுப்பாய்வு செய்ய**
**சில எளிய வழிமுறைகள்……………………………………………அபினந் ரெட்டி**
**eBird ஓர் அறிமுகம்…………………………………………………ப. ஜெகநாதன்**
**தமிழகத்தில் உள்ள பாறு கழுகுகளை மீளவைக்கும் திட்டம்……….S. பாரதிதாசன்**

**பறவை நோக்கல் உலா**

**ஆவணப்படம் திரையிடல்   சேகர் தத்தாத்ரியின் ‘சிலிகா ஏரி‘**



விராலடிப்பான். படம்: ரமா நீலமேகம்

# தமிழகப் பறவை ஆர்வலர்கள் சந்திப்பு, 21 - 22 அக்டோபர் 2017

ஒய். எம். சி. ஏ. முகாம், ஏலகிரி, வேலூர் மாவட்டம்

## இரண்டாம் நாள் நிகழ்ச்சிகள் 10:00 - 15:00

ஆசிய நீர்பறவைகள் கணக்கெடுப்பு 2018 திட்டமிடல்.........கே.வி. சுதாகர்

பொங்கல் பறவைகள் கணக்கெடுப்பு 2018 திட்டமிடல் .......ப. ஜெகநாதன்

கதிர்க்குருவி, வானம்பாடி, நெட்டைக்காலி வகைகளை
அடையாளம் காண சில ஆலோசனைகள்.......................தீபு கருதெடாத்து

கழுகு வகைகளை அடையாளம் காண
சில ஆலோசனைகள்..........................................V. சாந்தாராம்

பறவைக் குரலொலி ஓர் அறிமுகம்...............................திவ்யப்ரியா

பறவைத் தபால் தலைகள் கண்காட்சி........................... ரவீந்திரன்

பறவைகள் ஓவியக் கண்காட்சி....................................சிவக்குமார்

கண்ணகியின் பாதையில் பொங்கல் பறவைகள்
கணக்கெடுப்பு 2017...............................................S. பாரதிதாசன்

தூக்கணாங்குருவி ஆய்வு...........................................பிரியதர்ஷினி

திருநெல்வேலிப் பறவைகள்.......................................தேவிகா ராணி

மத்தியத் தமிழகத்தில் உள்ள ஆந்தைகள் குறித்த ஆய்வு.......T. சிவா

2018ஆம் ஆண்டு சந்திப்பிற்கான திட்டமிடல், நன்றியுரை.... கே.வி. சுதாகர்



மஞ்சள் மூக்கு ஆள்காட்டி. படம்: அரவிந்த் அமிர்தராஜ்

**4th Tamil Birder's Meet - Yelagiri, YMCA CAMP,** 21st & 22nd October, 2017

Program schedule - Day 1 - 10:30 AM to 18:00 PM

Welcome address and introduction........................K. V. Sudhakar

Birds of Tamil Nadu Pocket Guide release..............S. Theodore Baskaran

Discussion on checklist of birds of Tamil Nadu .....George Tom & V. Santharam

Filling eBird gaps, Urban bird project &
Monitoring key sites for birds in Tamil Nadu.........Suhel Quader

Tamil Poetry reciting.............................................Bird Poems by Asaithambi

How and what can we do to improve
birding activity in Tamil Nadu?...............................S V Ganeshwar

Discussion on Threatened Birds of Tamil Nadu
Introduction and Moderator.................................V. Santharam & S. Subramanya

**Paralell Sessions**

Sketching birds by................................................Abisheka Krishnagopal
How to make bird puppets?.................................R. Bhanumathi
Simple methods to understand your eBird Data...Abinand Reddy
Introduction to eBird in Tamil...............................P. Jeganathan
Recovery plan for Vultures of Tamil Nadu............ S. Bharathidasan



Photo: Rama Neelamegam

Birding in and around the campus

Documentory film screening -Shekar Dattari's Chilika – Jewel of Odisha

**4th Tamil Birder's Meet - Yelagiri, YMCA CAMP,** 21st & 22nd October, 2017

Program schedule - Day 2 - 10:00 AM to 15:00 PM

Birding in and around the campus



Discussion on Asian Waterfowl Census 2018............................ K. V. Sudhakar
Discussion on Pongal Bird Count 2018......................................P. Jeganathan

Tips for identifying warblers and larks and pipits......................Dipu Karuthedathu
Tips for identifying raptors...................................................V. Santharam

Introduction to bird calls and songs & call recording tips..........Divyapriya Chandrasekaran
Pongal Bird Count in Kannagi's Path.......................................S. Bharathidasan
Birds of Tirunelveli..............................................................Devika Rani
Talk on Baya weaver.............................................................Priyatharsini
Owls of Central Tamil Nadu...................................................Siva. T

Exhibitions
Bird Stamps Collections by Raveendran
Bird paintings by Sivakumar

Feedback session and concluding remarks – K. V. Sudhakar

Photo: Aravind Amirtharaj

# நான்காம் ஆண்டு தமிழ்ப் பறவையாளர்கள் சந்திப்பு- 2017 ஏலகிரி - கூட்ட நடவடிக்கைச் சுருக்கக் குறிப்பு

*21/10/2017 - முதல் நாள்*

10.45 am:

திரு.K. V. சுதாகர் அவர்கள் வரவேற்புரை ஆற்றினார். இதுவரை நிகழ்ந்த மூன்று தமிழ் பறவையாளர்கள் சந்திப்பை பற்றி விவரித்துவிட்டு, ஆண்டுதோறும் இதில் கலந்து கொள்பவர்களின் எண்ணிக்கை உயர்ந்து கொண்டே செல்வதைக் குறிப்பிட்டார். அதை தொடர்ந்து ஒவ்வொருவரும் சுருக்கமாக தங்களை அறிமுக படுத்திகொண்டனர். நிகழ்ச்சியில், கடைசி நேரத்தில் ஏற்பட்ட சில மாறுதல்களை திரு.ஜெகநாதன் அவர்கள் அறிவித்துவிட்டு அடுத்து திரு. தியடோர் பாஸ்கரன் அவர்களை பேச அழைத்தார்.

11.00 am:

தமிழகப் பறவைகள் எனும் குறுங்கையேட்டை திரு. தியோடோர் பாஸ்கரன் அவர்கள் வெளியிட அதை செல்வி கிருபா நந்தினி பெற்றுக்கொண்டார். பின்னர் திரு பாஸ்கரன் அவர்கள் உரையாற்றினார். இந்த நிகழ்ச்சியில் நான் ஏன் கலந்து கொள்கிறேன் எனில், ஒரே நேரத்தில் நிறைய பறவை ஆர்வலர்களை, நிபுணர்களை பாரக்க வாய்ப்பு இருப்பது தான் முக்கிய காரணம் என அவர் குறிப்பிட்டார். மேலும் வளர்ச்சி என்ற பெயரில் எந்த அளவுக்கு பறவைகளின் வாழிடங்களை அழிக்க படுகிறது அதனால் பறவைகளின் எண்ணிக்கை எப்படி குறைந்து வருகிறது என்பதை குறிபிட்டார்.

தேனீர் இடைவேளை

11.30 am:

திரு.சாந்தாராம், திரு ஜார்ஜ் டாம் இருவரும் சேர்ந்து தமிழகத்தின் பறவைப் பட்டியல் தயாரிப்பின் தற்போதைய நிலையைப் பற்றி உரையாற்றினர். இருவரும் தமிழ் நாட்டில் இதுவரை பார்த்து பதிவு செய்யப்பட்ட பறவை இனங்களை பற்றி விளக்கி சொன்னார்.

11.45 am:

தமிழ் நாட்டின் அழியும் விளிம்பில் இருக்கும் பறவைகள் யாவை? எனும் தலைப்பில் வட்டார சிவப்புப் பட்டியல் தயாரிப்பு குறித்து - V சாந்தாராம் மற்றும் S. சுப்ரமணியா இருவரும் விளக்கினார்கள். திரு.பாரதிதாசன் அவர்கள் பாறு கழுகளை பற்றி மிக சுருக்கமாக அறிமுக உரையாக பேசிவிட்டு அமர்ந்தார். திரு.ஜெகநாதன் ஆவர்கள், மதியம் நடைபெற போகும் இணைகூட்டத்தொடர்களான, பறவைகளை வரைவோம், பறவை கைப்பாவை செய்தல், eBird அறிமுகம், தமிழகத்தில் உள்ள பாறு கழுகுகளின் நிலைமை பற்றி என்று இவைகளை சொல்லிவிட்டு விருப்பம் உள்ளவர்கள் தங்கள் பெயர்களை கொடுத்துவிடுங்கள் என்றார் .

12.00 pm

திரு. சுஹேல் காதர் அவர்கள் விரிவான ஒரு பங்களிப்பைச் செய்தார். தமிழ் நாட்டில் பறவை பார்க்கப்படாத இடங்களை குறிபிட்டு சென்னை, கோவை போன்ற இடங்களை தவிர மற்ற இடங்களில் குறைந்த அளவே பறவைகளை பார்த்து பதிவு செய்யப்படுகிறது. தொடர்ச்சியாக பறவைகளை பார்த்து பதிவு செய்ய வேண்டும் என்பதை குறிபிட்டார். காணொளியில் ஒவ்வொரு மாவட்டங்களின் நிலைமையையும் தெளிவாக விளக்கினார். நடு, நடுவே பறவையாலர்களின் கேள்விகளுக்கு பதில் சொல்லிக்கொண்டே இருந்தார். மிக நீண்ட ஒரு பகுதியாக இவை இருந்தது.

உணவு இடைவேளை

2.30 pm:

திரு.ஆசை அவர்கள், அவரின் கவிதை புத்தகமான ''கொண்டலாத்தி'' பற்றி பேச வந்தார். நான்கு கவிதைகளை படித்து காட்டி எந்த சூழ்நிலையில் அவர் எழுதினார் என்பதை விளக்கி கூறினார்.

3.10 pm:

பள்ளி மாணவர்களுக்கு பறவைகள் பற்றிய விழிப்புணர்வு தொடர்ந்து ஏற்படுத்தி வருவதை பற்றி திரு.கனேஷ்வர் பேசினார். இதுவரை நிறைய பள்ளிகளில் விழிப்புணர்வு கூட்டங்கள்' நடத்தி உள்ளோம் என்று சொன்னார். படங்களை கொண்டு விளக்கினார். எந்த மாவட்டத்தை முடித்திருக்கிறோம். இன்னும் எந்த மாவட்டம் நோக்கி செல்கிறோம் என்பதையும் சொன்னார்.



திரு. தியோடோர் பாஸ்கரன்

இணைகூட்ட தொடர்கள் :

3.55 pm:

இக்கூட்டத்தில் பங்கு பெறுவோர் 5 குழுக்களாக பிரிந்து அவர்களின் விருப்பத்திற்கேற்ற குழுக்களில் தங்களை இணைத்து கொண்டு ஆர்வமுடன் செயல்படுவதை பார்க்க முடிந்தது. செல்வி. பானுமதி அவர்களின் கைப்பாவை செய்தல் குழுவில் பலர் இருந்தனர். பறவைகளை வரைதல் நிகழ்ச்சியை அபிஷேகா நடத்திக் கொண்டிருந்தார். அபினந் ரெட்டி eBird தரவுகளை எப்படி பகுப்பாய்வு செய்வது என்பது பற்றி விளக்கிக் கொண்டிருந்தார். eBird பற்றி திரு.ஜெகநாதன் அவர்கள் சொல்லிக் கொண்டிருந்ததை சுமார் 5 பேர் ஆர்வமுடன் கவனித்து கொண்டிருந்தனர். தமிழகத்தில் பாறு கழுகுகளின் மீளமைக்கும் திட்டம் குறித்து திரு.பாரதிதாசன் விரிவாக விளக்கி கொண்டிருந்தார். தமிழ் நாடு அரசு பாறு கழுகுகளை, அழிவில் இருந்து காப்பாற்றுவதற்கு என்ன நடவடிக்கை எடுக்கலாம் என்பதை அறிக்கையாக கொடுக்க, மிக விரிவான அறிக்கையை தயாரிக்கப்பட்டிருந்தது., அதனை அக்கூட்டத்தில் பங்கு பெற்றோர் படித்து வேறு ஏதாவது சேர்க்க, நீக்க வேண்டுமா என விவாத்திதும், ஆலோசனைகளை வழங்கிக்கொண்டும் இருந்தனர்.

முதல் நாள் இனிதே முடிவுக்கு வந்தது. அனைவரும் குழுக்களாக நின்று, அமர்ந்து, பறவைகளை பார்த்து கொண்டு பேசிகொண்டிருன்தனர். இரவுப் பறவைகளை பார்பதற்கு சில பேர் தயாரகி கொண்டிருந்தனர். இரவில், சேகர் தத்தாதிரியின் சிலிக்கா ஏரி-பறவைகளை பற்றிய ஆவணப்படம் ஒளிபரப்பட்டது.



Dr. சுஹேல் காதர்



Dr. S. சுப்ரமணியா



தமிழகத்தில் பாறு கழுகுகளின் மீளமைக்கும் திட்டம் குறித்த கூட்டம்

*22/10/2017 - இரண்டாம் நாள்*

10.00 am:

திரு சாந்தாராமும், திரு சுதாகர் அவர்களும் Asian Waterfowl Census குறித்து உரையாற்றினார்கள். இதைத் தொடர்ந்து திரு.ஜெகநாதன் அவர்கள் பொங்கல் பறவைகள் கணக்கெடுப்பை பற்றி உரையாற்றினார். எங்கெல்லாம் எடுக்கபடவில்லையோ அங்கெல்லாம் இந்த தடவை பறவைகள் கணக்கெடுக்க படவேண்டும் என்று குறிப்பிட்டார். குறிப்பாக- தேனி பகுதியில் யாரும் பறவை கணக்கெடுக்க படவில்லை என்பதை சொன்னார்.

10.20 am:

திரு. தீபு கருதெடாத்து நேட்டைக்காலிகள், வானம்பாடிகள், கதிர்குருவிகள் (Pipit, Larks, Warbler) ஆகிய எளிதில் இனங்கான முடியாத சிறிய பறவை வகைகளை எப்படி நாம் களத்தில் பிரித்துக் கண்டுபிடிப்பது என்பதை பற்றி விவரித்தார். ஒவ்வோரு பறவையின் படத்துடன், திரு.தீபு முக்கியமாக கவனிக்கவேண்டிய பறவையின் தலைபகுதி அமைப்பு, இறகில் காணப்படும் கருப்பு பட்டைகள், கழுத்து பகுதியில் இருக்கும் நுணுக்கமான மாறுபாடுகள், அலகின் வடிவைப்பு, வாலின் நீலம், கால் நகத்தின் அளவு என மிக நுணுக்கமாக கவனிக்க வேண்டியவைகளை மிக சுவாரசியமாக எடுத்துச் சொன்னார். நடு நடுவே கேட்கப்பட்ட கேள்விகளுக்கு விரிவாக பதில் கொடுத்துகொண்டிருந்தார். இந்த அமர்வு மிகவும் பயனுள்ளதாக இருந்ததாக பலர் கூறினர்.

கைப்பாவை கலைஞர் பானுமதி அவர்கள் கொடுத்த பயிற்சியின் மூலம் சில பறவை ஆர்வலர்கள் தாங்கள் செய்த கைப்பாவைகளை அனைவரின் முன்பும் வந்து காண்பித்து விவரித்தார்கள். இதில் பறவைகள் மட்டும் இல்லாமல் தவளை, மீன், விலங்குகள், பறவைகள் என பல உயிரினங்களைப் பார்க்க முடிந்தது.



பறவை ஆர்வலரும், தபால் தலை சேகரிப்பவருமான மதுரையைச் சேர்ந்த திரு. ரவீந்திரன் அவர்கள், உலகநாடுகள் வெளியிட்டிருக்கும் பறவை தபால் தலைகளை சேகரித்து அதை காட்சிக்கு வைத்திருந்தார். பறவை ஆர்வலரும், ஓவியருமான திருவண்ணாமலையைச் சேர்ந்த திரு சிவக்குமார் அவரது பறவை ஓவியங்களை பார்வைக்காக வைத்திருந்தார். இந்த இரண்டு கண்காட்சிகளையும் அனைவரும் பார்த்து ரசித்தனர்.

இடைவேளை





11.30 am:

இரைகொல்லி பறவைகளை பற்றி திரு.சாந்தாராம் அவர்கள் காணொளி மூலமாக படங்களுடன் விளக்கி கூறினார். Pipit, Larks, Warbler போன்றவற்றை சரியாக கண்டுபிடிப்பது எப்படி சிரமமோ அதே போல் இரைகொல்லி பறவைகளும் என்பதை அறிய முடிந்தது. பெரிய நிபுணர்கள் கூட முழுவதும் கண்டுபிடிப்பது கடினமே என்ற எழுத பட்ட வாசகம் ஒன்று ஒளிபரப்பட்டது. இரைகொல்லி பறவைகளைஇனம்காண, அதன்இறக்கைஅமைப்பு, வாலின்அமைப்பு, நிறங்கள், இறக்கையில் காணப்படும் பட்டைகள் ஆகியவற்றை பார்த்து அறியவேண்டும் என்பதை விரிவாக திரு.சாந்தாராம் குறிப்பிட்டார்.

இடையிடையே தேவையான சில குறிப்புகளை திரு.தீபுவும் சொல்லிக் கொண்டிருந்தார். இரைகொல்லி பறவைகளில் அதன் ஒவ்வொரு பருவத்திலும் நிறை வேறுபாடுகள் உண்டு என்று சொல்லிவிட்டு அதற்கு உதாரணமாக: கருடன் என்று அழைக்கப்படும் Brahminy Kite ஒவ்வொரு பருவத்திலும் அதன் நிறங்கள் மாறுவதால் நுணுக்கமாக பார்த்து அறிய வேண்டும் என்பதை விளக்கினார். இது போன்ற பல தகவல்கள் நம் பறவைகளை அடையாளம் காணும் அறிவை அதிக படுத்திகொள்ள வழிவகுத்ததாக கூட்டத்தில் பங்குபெற்றோர் தெரிவித்தனர்.

12.15 pm:
SACONஐச் சேர்ந்த ஆராய்ச்சி மாணவி திவ்யப்ரியா அவர்கள் பறவைகளின் குரலை எப்படி பதிவு செய்யவேண்டும், எந்த பறவை குரலெழுப்பும், எவை பாடும், பறவை குரல்களின் வகைகள், பதிவு செய்ய பயன்படும் கருவிகள், சரிபார்க்க வலைதளங்கள் என்று பல உபயோகமான தகவல்களைச் சொன்னார்.

12.45 pm:
பொங்கல் பறவைகள் கணக்கெடுப்பில் சுவாரசியமாக நிகழ்ந்த கண்ணகி பாதையில் பறவைகள் கணக்கெடுப்பு எடுக்கப்பட்டதை (பூம்புகாரில் இருந்து மதுரை வரை) திரு.பாரதிதாசன் விவரித்தார். ஒரு கிலோமீட்டர்க்கு ஒரு முறை நின்று அங்கு பத்து நிமிடம் பறவைகளை பார்போம். இரண்டு, மூன்று குழுக்களாக செயல்பட்டோம் என்றார் 2017ல் செய்த இந்த நிகழ்வை வரும் ஆண்டும் அனைவரும் இதில் கைகோர்க்க வேண்டும் என்று அழைத்தார்.

உணவு இடைவேளை

2.10 pm:
திருநெல்வேலி பறவைகள் பற்றி தேவிகா ராணி அவர்கள் பேசினார். ராஜபாளையத்தில் பார்த்த பறவைகள் பற்றய தகவல்களையும், பறவைகள் செயல்பாடுகள் பற்றியும் விவரித்தார்.

2.25 pm:
தூக்கனாங்குருவி, இவற்றின் வாழிடங்கள், கூடு கட்டும் முறைகள் போன்ற தகவல்களை பிரியதர்ஷனி அவர்கள் அனைவருக்கும் புரியும்படி சொன்னார். இவர் எப்படி இந்த பறவையை பார்த்தார். கிணற்று பக்கத்தில் கூடு கட்டுவதை குறிப்பிட்டு மற்றும் பெரும்பாலும் நீர் நிலை அருகில் இவை கூடு கட்டுகிறது என்பதையும், இவற்றை பார்க்க எங்கெல்லாம் சென்றேன் என்ற தகவல்களையும் தந்தார். போன ஆண்டை விட (2016) இந்த ஆண்டு (2017) இவற்றின் கூடுகளின் எண்ணிக்கை உயர்ந்திருப்பதை இவர் ஆரய்ச்சி வழியாக கண்டுபித்ததாக குறிபிட்டார்.

2.40 pm:
தமிழகத்தின் மத்திய மாவட்டங்களில் தென்படும் ஆந்தை வகைகள் பற்றியும், அவற்றின் பாதுகாப்பு நிலை, உழவர்களுக்கு அவை செய்யும் நன்மைகள், அவை எதிர்கொள்ளும் பாதிப்புகள் என்பதை பற்றி ஆராய்ச்சி மாணவர் திரு. சிவா அவர்கள் படங்கள் வழியாக விளக்கினார்.

2.55 pm:
வந்திருந்த அனைவரும், நிகழ்ச்சி பற்றிய கருத்துகளை சொன்னார்கள். அடுத்த முறை எப்படி நடத்தாலாம் என்ற தகவல்கள் தரப்பட்டது. ஒருவர், மூன்று நாட்கள் நடத்துங்கள் என்றார். நல்ல ஏற்பாடுகள் செய்யப்பட்டு இருந்தது என்று பலரால் சொல்லப்பட்டது. இதன் மூலமாக நிறை விஷயங்களை கற்று கொள்ளமுடிந்தது என்று நிறைய புதியவர்கள் சொல்வதை பார்க்க முடிந்தது. அடுத்த முறை இன்னும் சிறப்பாக நடத்துவதற்கு இந்த தகவலகள் பயன்தருவதாக அமைந்துள்ளது.

திரு சுதாகர் அவர்களின் நன்றியுரையுடன் இந்த இரண்டு நாள் பறவை ஆர்வலர்கள் சந்திப்பு நிறைவுற்றது.



திரு சுதாகர்



செல்வி. திவ்யப்ரியா

# Minutes of the Tamil Birders meet held at YMCA CAMP, Yelagiri, Vellore District, Tamil Nadu.

**Day 1, Date: 21st October 2017, Saturday**
**10:00 AM to 19:30 PM**

• Welcome address by Mr. K V. Sudhakar of Madras Naturalist Society, Chennai. This was followed by a brief review of the past years meet by Dr. V. Santharam

• Mr. Theodre Bhaskaran released the Tamil Bird pocket guide of Tamil Nadu and the copy was received by Ms. Kirubhanandhini.

• Dr. Suhel Quader Spoke about the need to fill in e-bird gaps and the different ways of citizen involvement in bird monitoring , from Behavioral studies to regular monitoring of key sites which was followed by a discussion. There were several suggestions from the participants. Mr. L. Shyamal suggested that sessions should be conducted for bird enthusiasts on understanding certain scientific definitions/ theories; Mr. Dipu Karuthedathu suggested a possible project utilizing photographs to understand basic ecology of birds. For eg he suggested that we could work out the ageing of Brahminy kites by compiling photographs by looking at the images in eBird, Facebook and other sources. It was decided that Dipu would write a brief project proposal on the moult pattern of Brahminy kite on his blog and share it on Tamil birds e-group.

• A Tamil poetry recital took place post lunch by Mr. Asai where he recited poems he had written on birds.

• In the next session Dr. Santharam and Mr. George Tom discussed updated the participants about the progress in preparing the checklist of the birds of Tamil Nadu.

• This was followed by a discussion on preparing a Threatened Birds of Tamil Nadu. Dr. S. Subramanya, Scientist and senior faculty at the University of Agriculture Sciences, Bangalore spoke about his contribution and experience in preparing the globally threatened bird list. In order to take this forward suggestion were made to shortlist bird species that are severely threatened in Tamil Nadu and work towards monitoring and conserving such species.



Mr. Asai


Mr. Dipu Karuthedathu

• A presentation was made by S. V. Ganeshwar about his bird education work in government schools in partnership with Tamil Nadu Education Department. His team of 14 people has managed to create awareness on birds in 16 districts of TN where about 10,814 teachers have participated. They have used various methods of teaching from PPT's to field sessions, from songs to storytelling. This session opened a lot of sharing among the participants who also included teachers and educators.

• Five parallel sessions were held in the evening –

1) Ms. Bhanumati, environment educationist and puppetry expert, conducted workshop on making puppets from papers

2) Ms. Abhisheka Krishnagopal, wildlife artist, taught field sketching of birds.

3) Mr. Abinand Reddy handled the session on getting to understanding e-bird data

4) Dr. P. Jeganathan conducted a session on introduction to eBird and

5) Mr. Bharathidasan of Arulagam had a session on recovery plans for vultures of Tamil Nadu.

• The day ended with the screening of a film "Chilika – Jewel of Odisha " by Shekhar Dattari.

**Day 2, Date: 22nd October 2017, Sunday**
**10:00 AM to 15:30 PM**

• The program started off with Dr. Santharam and Mr. K. V. Sudhakar briefing about conducting Asian Waterfowl Census in Tamil Nadu. Mr. P. Jeganathan briefed about Pongal Bird Count 2017 for few minutes.

• Mr. Dipu Karuthedathu gave a detailed presentation on identifying, Larks, Pipits and warblers, the minute differences between similar looking species, habitats there are found and so on. He also played calls of similar looking species which are hard to identify in the field.

• The participants of the puppet workshop along with Ms. Bhanumathi presented their beautifully made paper puppets which included the white-bellied drongo, trees, frogs and insects.

• Following this Dr. Santharam conducted a session on identifying raptors.

Lunch

• Ms. Divya Priya, a Phd student from SACON gave a short and informative talk on Bird calls and songs. She described the difference between songs and calls of birds, gave information on the kind of equipment used to record calls in the wild, tips for recording bird call/songs and so on.

• This was followed by a brief description by Bharatidasan and Jegan on the Pongal Bird Count done along Kannagi's path which began at Poompuhar, Tiruvaiyaru, Tiruchi and ended at Madurai.

• The following talk was by Devika Rani on the monitoring of few wetlands which included Koonthakulam and Naguneri in Tirunelveli. She presented a list of bird as well as plant species of the wetlands surveyed.

• A talk on the breeding and nesting behaviour of Baya Weavers was given by Priyatharshini who had surveyed around 480 wells where the weavers nested during her study period near Kolli hills. She looked at the numbers of nests constructed against the numbers of nests completed or abandoned, the species of trees/pants chosen for nesting, etc.

• The last presentation for the day was by Siva, a PhD scholar from Nehru Memorial College, Puthanampatti, Tiruchinapalli who studies Owls of Central Tamil Nadu.

• After a brief feedback session Mr. K V. Sudhakar delivered a concluding remarks and vote of thanks.

**Displays**

Mr. Sivakumar, Bird artist from Tiruvannamalai displayed his bird paintings

Mr. Raveendran Natrajan, birder and philatelist from Madurai displayed his bird stamps collection.


Birders in the field


Bird sketching workshop



Registration desk (left to right). S.V. Ganeshwar, V. Rajarajan & Tamil Selvan

# Tamil Birders Meet 2017, Yelagiri - Participants Feedbacks

## தமிழ் பறவையாளர்கள் சந்திப்பு 2017, ஏலகிரி பங்குபெற்றோர் கருத்துக்கள்:

*கிருபாநந்தினி - மின்னஞ்சல் மூலம்*

*பறவை பார்த்தல் பல வகையில் பயன்பட்டாலும் அதன் முக்கியமான நோக்கம் அழிவிலிருந்து அவற்றை காப்பாற்றுவதே. எப்பொழுதும் இயற்கை ஆர்வளர்களுக்கான வருத்தம் என்னவெனில், பறவை பார்த்தல் இது ஒரு பொழுது போக்காக, நின்றுவிடுவது. ஆனால் தமிழ்நாடு பறவையாளர்கள் 2017 ஆம் ஆண்டு சந்திப்பில் பறவை பார்த்தல் மட்டுமல்லாமல் அதன் ஆய்வுகளைப்பற்றி பேசியது நிறைவாக இருந்தது:*

*1. தூக்கணாங்குருவிகளின் ஆய்வு,*
*2. ஆந்தைகள் குறித்த ஆய்வு*
*3.கண்ணகிப் பாதையில் பறவைகள் கணக்கெடுப்பு,*
*4.பறவைகளின் குரல் ஒலி*
*5. திருநெல்வேலியில் பறவைகள் மற்றும் அதன் சுற்றுச்சூழல்*
*6. அழிந்துவரும் பாறுக் கழுகுகளை (Vultures) மீட்டெடுக்க வேண்டிய அவசியமும் செயல்திட்டமும்,*
*7. பள்ளி மாணவர்கள் பறவை நோக்கலில் உள்ள ஈடுபாடு*

*என பல ஆய்வுகள், பறவைக் கல்வி அனைத்தும் தமிழ்நாடு பறவையாளர்கள் சந்திப்பினை அடுத்த கட்டத்திற்க்கு நகர்ந்திருப்பதாக கருதுகிறேன்.*

**Raveendran Natarajan**

Forming a group and organizing is very difficult which we have done it successfully for 4th year. It is due to the effort of the organizers. Priyadarshini working for few months and had been talking to me about her work and presentation for a long time. Her field effort is excellent. Lack of exposure to students from rural areas or places with fewer facilities makes their field studies tough. So I worked as field coordinator for 3 women colleges in Madurai. It is said that if we take and spread a thing among women, it will be carried for 3 generations.

**S Thiyagarajan**

Based on field studies, we must encourage people make presentations here at this meet. It will encourage others to do serious bird research projects.

**Banumathi**

This is my first Tamil Birders Meet and I thank organizers for inviting me and to do a session on puppet making here. Their efforts are commendable. It is happy to see women participation and next year please invite and give opportunities for more women.

**T Sakthivel**

Make it as 3 day programme. Coming in the afternoon and going back again in afternoon of next day makes it a single day program for us.

**P Jeganathan**

Boopathy Srinivasan designed the logo for the meet. Selvaganesh and students made banner and bought it. Tamil Selvan, Ganeshwar and Rajarajan’s help is appreciable. We couldn’t reach out to local schools and people here; no press coverage too. We shall correct it next year.

# Blogs and articles by the participants about Tamil Birders Meet 2017

## தமிழ் பறவையாளர்கள் சந்திப்பு 2017 குறித்த வலைப்பதிவுகளும், கட்டுரைகளும்



https://solaipaadi.wordpress.com/2017/10/30/tamil-nadu-ebirders-meet-2017-at-ymca-yelagiri/

SOLAIPAADI

My diaries

HOME / MY DIARY / ABOUT / CONTACT

### Tamil Nadu ebirders' meet 2017 at YMCA, Yelagiri

OCTOBER 30, 2017 / SOLAIPAADI

This is my second visit for Tamil Nadu ebirders' meet. The pleasant weather, 14 hairpin bends, view of the town from the bends gave delightful welcome. We six researchers from SACON had visited this event.

CATEGORIES

- English
- Welcome!

FOLLOW BLOG VIA EMAIL

Enter your email address to follow this blog and receive notifications of new posts by email.

Blog post by Divyapriya - https://solaipaadi.wordpress.com/2017/10/30/tamil-nadu-ebirders-meet-2017-at-ymca-yelagiri/



birdsshadow.blogspot.in/2017/10/tamil-birders-meet-2017-yelagiri.html

More ▾ Next Blog» Create Blog Sign In

BIRDS SHADOW

வாருங்கள் கிளியின் கூட்டிற்கு சாப்பிட போவோம் .........

Friday, 27 October 2017

### Tamil Birders Meet- 2017 – Yelagiri

ஜோலார்பேட்டையில், ஒரு ரிசர்வ் பேங்க் உள்ளது என்று தெரியாமல் இருந்துவிட்டேன். இரயில் நிலையத்தில் அருகில் இருந்த டீ கடையில் அதிகாலை நான்கு நாற்பத்தைந்து மணிக்கு(4.45am) டீ குடித்துவிட்டு, பத்து ரூபாய் காயினை கொடுத்தபொழுது, செல்லாது என்று டீ கடைகாரர் சொல்லிவிட்டார்.

ஒரு கணம் ஆடிபோய்விட்டேன், என்ன அண்ணே அதிகாலையில் இப்படி செல்லாது என்று சொன்னால் என்ன செய்ய முடியும். போனமுறை தமிழ்ப் பறவைகள் சந்திப்புக்கு செல்லும்பொழுதுதான் 1000, 500 ரூபாய் செல்லாது என்று சொல்லிவிட்டார்கள், இதை நம்பி ஊரு விட்டு, வேறு ஊருக்கு வந்து விட்டோம் என்ற

Popular Posts

அடையார் நதி

மணப்பாக்கம் நீர் புதிய தொலைக்காட்சி பெட்டி வாங்கினால் சன் டிவி கனக்ஷன் வாங்கியாச்சா என்று ஊர்களில் கேட்பார்கள், கேபிள் இண...

சு.தியடோர் பாஸ்கரன்

காலில் அடிபட்டதால் முழு ஓய்வில், இந்த நேரத்தில் தியடோர் பாஸ்கரன் அவர்களின் காட்டுயிர் புத்தகங்களை ஒரு சேர படிக்கும் வாய்ப்பு கிடை...

பறவை நோக்குதல் - தொடர்-3

மாட்டின் அருகில்

செழியனின் வலைப்பதிவு

http://birdsshadow.blogspot.in/2017/10/tamil-birders-meet-2017-yelagiri.html



### தமிழ்ப் பறவையாளர்கள் சந்திப்பு 2017

அ.மு.செய்யது

தமிழ்ப் பறவையாளர்கள் சந்திப்பு கடந்த நான்கு ஆண்டுகளாகத் தமிழகத்தின் வெவ்வேறு பகுதிகளில் நடைபெற்று வருகிறது. இந்த ஆண்டு, கடந்த அக்டோபர் மாதம் 21,22 ஆகிய தேதிகளில், வேலூர் மாவட்டம் ஏலகிரி மலையில் நடைபெற்றது. இயற்கை அழகும் பல்லுயிர் வளமும் நிறைந்த ஏலகிரி YMCA-வில் 120க்கும் மேற்பட்ட தமிழக,கேரள, மாநிலங்களைச் சேர்ந்த பறவையாளர்கள் பங்கேற்றனர். இந்நிகழ்வில் ப.ஜெகந்நாதன், தியோடர் பாஸ்கரன், சாந்தாராம் ,சுப்பு, சுஹைல் காதர், கணேஷ்வர், தீபு கருத்தேடு ஆகியோர் கலந்து கொண்டு பல்வேறு தலைப்புகளில் சிறப்புரையாற்றினார். "தமிழகத்தின் பறவைகள்" என்கிற குறுங்கையேடு வெளியிடப்பட்டது.

தமிழகத்தில் இதுவரை பார்த்து இனங்காணப்பட்ட பறவையினங்கள், புதிதாகப் பார்க்கப்பட்ட பறவைகள் என ஒழுங்கு செய்யப்பட்ட பட்டியல்கள் குறித்து மூத்த பறவையாளர் வி.சாந்தாராம் உரையாற்றினார். மேலும் தமிழகத்தின் பறவை பார்க்கப்படாத இடங்கள் குறித்து சுஹைல் காதர் சில அறிவிப்புகளைச் செய்தார். தமிழகத்தில் இதுவரை 535 பறவையினங்கள் (உள்ளினங்களைச் சேர்க்காமல் 526) இதுவரை பதிவு செய்யப்பட்டிருப்பதாகச் சாந்தாராம் தெரிவித்தார். நடப்பு ஆண்டில் புதிய பதிவுகளாக, அரசக் கழுகு (Eastern Imperial Eagle , கரும்பழுப்புக் கடற்காக்கை(Sooty Gull), சாம்பல்வால் மண்கொத்தி(Grey Tailed Tattler), கருந்தொண்டை முக்குளிப்பான் (Black necked Grebe)

• காடு • நவ - டிசம்பர் • 2017 54

செய்யது காடு இதழில் எழுதிய கட்டுரை

# செய்திகளில்... | Media coverage

vivarangal.in/தமிழ்நாடு-பறவையாளர்கள்-ச/

விவரங்கள் ......

செய்திகள் | சினிமா | ஹெல்த் | கல்வி | விளையாட்டு

## தமிழ்நாடு பறவையாளர்கள் சந்திப்பு



தமிழ்நாடு பறவையாளர்கள் சந்திப்பு 21-10-2017 மற்றும் 22-10-2017 ஆகிய இரண்டு தேதிகளில் வேலூர் மாவட்டம் ஏலகிரியில் நடைபெற்றது. நூற்றுக்கும் மேற்பட்ட பறவை ஆர்வலர்கள் சந்திப்பில் கலந்து கொண்டனர். இந்த நிகழ்ச்சியில் கே.வி. சுதாகர், ஓசை காளிதாஸ், ஜார்ஜ் டாம், வி. சாந்தாராம், கணேஷ்வர், அபிஷேகா கிருஷ்ண கோபால், ஆர். பானுமதி, ப. ஜெகநாதன், எஸ். பாரதிதாசன், திவ்யப்ரியா, தீபு, ப்ரியதர்ஷிணி, தேவிகா ராணி, சிவா ஆகியோர் பறவைகள் பற்றிய வெவ்வேறு தலைப்புகளில் உரையாற்றினார்கள். தமிழகம், கேரளா மற்றும் கர்நாடகாவில் இருந்து பல்வேறு பறவையாளர்கள், பறவைப் புகைப்படக்கலைஞர்கள் பங்கேற்றனர். இதில் பறவைகளை வரைதல், பொம்மைகள் செய்தல், இபேர்டு எனப்படும் பறவை கணக்கெடுப்பு மென்பொருளைப் பயன்படுத்தல் போன்ற பல்வேறு செயல்முறை விளக்கங்கள் நிகழ்த்தப்பட்டன. பறவை நோக்கு பற்றியும் ஆலோசனைகள் வழங்கப்பட்டது.


Vivarangal website

# Spotted: Western Ghats bird in Eastern Ghats

Shanmughasundaram.J
@timesgroup.com

**PRIZED SPOTTINGS**

**NILGIRI FLOWERPECKER** is widely distributed in Western Ghats



- It is also spotted in Shervayor Hills in Yercaud in Salem district in the Eastern Ghats
- It feeds on fruits of mistletoe and nectar from flowers

**ORIENTAL SCOPS OWL** feeds on rats and frogs from agriculture fields



- It nestles in tree hollows and crests and is rare to spot

Vellore: The Nilgiri flowerpecker, a bird which is endemic to the Western Ghats, and the oriental scops owl were recorded for the first time in Yelagiri Hills. The two-day meet of the Tamil Nadu Birders Network on October 21 and 22 led to the discovery of the two species in the Poor man's Ooty located between the two metro cities — Chennai and Bengaluru.

"Nilgiri flowerpecker was spotted by two groups of birdwatchers independently on the YMCA campus and its surroundings in the hills. It was recorded for the first time in Yelagiri. It was not recorded even during the recently-concluded survey (a reassessment of the avian species diversity in the Eastern Ghats of Tamil Nadu)," said P Jeganathan, member of the network.

He was one among the 120-odd birders who took part in the meet aimed at promoting awareness about the species in the hills, conserving the species and encouraging locals into birdwatching.

The species was sighted of October 21 in two different spots near the YMCA campus in Thayalur village. "We recorded and uploaded the images and details on the eBird India portal," he said. The species was restricted to the mountains of Western Ghats, but also found in a few places in the Eastern Ghats. "The species was earlier sighted in Shevaroy Hills in Yercaud in Salem district. Yelagiri is the second place where the species was recorded in the Eastern Ghats," said Jeganathan.

On the same day, another group of the participants sighted oriental scops owl and also photographed it. "It is the tiniest among 35 species of owls found in the country. It measures 90cm," said T Siva, who is doing a PhD on owls.

Though the species was common among the 15 species of owls found in Tamil Nadu, it has been rarely sighted. "We spotted and photographed an adult owl. We have also confirmed the presence of three other birds of the same species in the locality," said Surendher Boopalan, a primary school teacher from Puducherry.

https://timesofindia.indiatimes.com/city/puducherry/nilgiri-flowerpecker-oriental-scops-owl-sighted-in-yelagiri/articleshow/61349952.cms

# பறவைகள் குறித்தும் போதிப்போம்!

ந. வினோத் குமார்

தி இந்து
தமிழால் இணைவோம்



Published : 28 Oct 2017 | 11:56 IST
Updated : 28 Oct 2017 | 11:56 IST

'டேய் அங்க பாருடா... சீகாரப் பூங்குருவி', 'அந்த மரத்துல பாரு... மலை மைனா' என்று விதவிதமான பறவைகளின் பெயரைச் சொல்லி, சக நண்பர்களுக்குக் காட்டி மகிழ்ந்து கொண்டிருந்தனர் அந்த மாணவர்கள். கடந்த 21, 22-ம் தேதிகளில் ஏலகிரியில் நடைபெற்ற 'தமிழ்ப் பறவையியலாளர்கள் சந்திப்பில்'தான் இந்தக் காட்சி. பாடப் புத்தகங்களைத் தாண்டி பறவைகள் குறித்து இவ்வளவு அறிவா என்று வியந்து அவர்களிடம் பேசினோம்.

வால்பாறையில் உள்ள சின்கோனா அரசு உயர்நிலைப் பள்ளியைச் சேர்ந்தவர்கள், அந்த மாணவர்கள். 6-ம் வகுப்பு முதல் 10-ம் வகுப்புவரை படிக்கிறார்கள். கிரிக்கெட் மட்டையும் செல்போனுமாகச் சுற்றித் திரியும் மாணவர்களுக்கிடையில், கைகளில் க்ரிம்மெட் பறவைக் கையேடு, கழுத்தில் இருநோக்கியுடன் பறவைகளைத் தேடித் தேடிக் களிக்கும் ஆர்வம் இவர்களுக்கு எப்படி வந்தது?

"பெரியவர்களைப் பார்த்துத்தான், குழந்தைகள் எல்லாவற்றையும் கற்றுக்கொள்கிறார்கள். இவர்களும் அப்படித்தான்" என்கிறார் செல்வ கணேஷ். இவர், மேற்சொன்ன பள்ளியில் ஆங்கில ஆசிரியர். அந்த மாணவர்களுக்குப் பறவை நோக்குதலில் ஆர்வம் ஏற்பட இவரே காரணம்!

**சுயமான தேடல்**

http://tamil.thehindu.com/general/environment/article19932649.ece

http://tamil.thehindu.com/general/environment/article19932649.ece

# பாறு கழுகுகளை மீட்டெடுக்கும் செயல்திட்டம் குறித்து கலந்துரையாடல்

## தமிழ் நாடு பறவையாளர்கள் சந்திப்பு(2017), ஏலகிரி.

சு. பாரதிதாசன், அருளகம்

தமிழ் நாடு பறவையாளர்கள் சந்திப்பு தமிழகமெங்கும் இருக்கும் பறவையாளர்களை எல்லாம் ஒரே இடத்தில் சந்திக்கும் நல்வாய்ப்பினை ஆண்டுதோறும் ஏற்படுத்தி வருகிறது. இப்படிப்பட்ட நல்ல நிகழ்வில் பலதுறை அறிஞர்களும் குழுமியிருக்கும் இடத்தில் பாறு கழுகுகளை மீட்டெடுக்கும் செயல்திட்டம் குறித்து கலந்துரையாடல் நிகழ்த்தினால் நன்றாய் இருக்கும் என்ற யோசனையை முன்வைத்தோம். அதைக் கனிவுடன் ஏற்றுக்கொண்ட ஒருங்கிணைப்பாளர் திரு.ஜெகனாதன் அவர்கட்கும், நிகழ்ச்சி ஏற்பாட்டாளர்களுக்கும் நன்றியினைத் தெரிவித்துக்கொள்கிறோம்.

கீழ்க்கண்ட செயல்கள் குறித்து கலந்துரையாடப்பட்டது விவாதிக்கப்பட்டது.

1. தடைசெய்யப்பட்ட டைக்குளோபினாக் மருந்து கால்நடைகள் பயன்பாட்டிற்கு போகாவண்ணம் தடைசெய்தல். (டைக்குளோபினாக் மருந்தின் விலை பாதுகாப்பான மாற்று மருந்தான மெலாக்சிகம் மருந்தை விடக் குறைவாகயிருப்பதினாலும், உடனடியாக வலியயை கட்டுப்படுத்துவதினாலும் சில மருத்துவர்கள் டைக்குளோபினாக் மருந்தை நாடுகின்றனர். இதை முற்றாக நிறுத்தவேண்டும் என்ற கோரிக்கை விடப்பட்டது).

- இது குறித்து விவாதித்தபோது தடையாணை நீதிமன்ற நிலுவையில் இருப்பதும் சுட்டிக் காட்டப்பட்டது. (நல்வாயப்பாக தடையாண கடந்த 23-10-2017 அன்று விலக்கிக்கொள்ளப்பட்டது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். இதில் எமது பங்கும் சிறிய அளவில் இருந்தது என்பதையும் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்)

- மாற்று மருந்தின் விலையைக் குறைக்கவும் இந்த மருந்துக்கான GST விலக்குப் பெறவும் அரசிடம் முறையிட ஆலோசனை தெரிவிக்கப்பட்டது.

2. டைக்குளோபினாக் மருந்தைத் தடைசெய்தது போன்றே தீங்கு விளைவிக்கும் மற்ற மருந்துகளான கீட்டோபுரோபேன், அசிக்குளோபினாக், புளூநிக்சின், நிமுசிலாய்ட்ஸ் மருந்துகளையும் கால்நடைகள் பயன்பாட்டிற்குத் தடை செய்ய வேண்டும் என்ற வேண்டுகோள் முன்மொழியப்பட்டது.

- பம்பாய் இயற்கை வரலாற்றுக்கழகம் மற்றும் பிற அமைப்புகளுடனும் இணைந்து இதற்கான வேலைகளை முன்னெடுக்க வேண்டும் என்று யோசனையை சாந்தாராம் அவர்கள் தெரிவித்தார்.

3. பாறுகளின் அழிவைச் சூழல் மேலாண்மைச் சட்டம் 2005, பிரிவு 62- இன் படி தேசியச் சூழல் பேரழிவாக அறிவிப்பது.

- நீண்ட கால திட்டம் என்பதனால் அரசாங்கம் நடைமுறை படுத்துவது கடினம். பேரிடர் என்று குறிப்பதனால் அதற்க்கான தரவுகளை கட்டாயம் தயார்படுத்த வேண்டும். இதற்காக பேரிடர் மேலாண்மைக் குழுத் தலைவர் திருப்புகழ் அவர்களைச் சந்திக்க திரு.தியோடர் பாஸ்கரன் அவர்கள் யோசனை தெரிவித்தார்.

4. புதிதாக புழக்கத்தில் விடப்படும் கால்நடை மருந்துகளாலும் பிற மருந்துகளாலும் கால்நடைகளுக்கும் பாறுக் கழுகுகளுக்கும் பிற உயிரினங்களுக்கும் ஏற்படும் அபாயம் குறித்து ஆராயக் குழு அமைத்தல்.

- இதற்கான வாய்ப்பு மிகக் குறைவு எனவும் இதற்கு அழுத்தம் இப்போது தர வேண்டாம் எனவும் கால்நடை பல்கலைக்கழக பேராசிரியர்கள் டாக்டர் ஸ்ரீகுமார் அவர்களும் வெங்கட்ரமணன் அவர்களும் தெரிவித்தனர்.

5. பாறுகளுக்குக் கேடுபயக்கும் டைக்குளோபினாக் மற்றும் இதர மருந்துகளைப் பயன்படுத்தாமல் இருக்கும்படி பால் கூட்டுறவுச் சங்கங்களை ஊக்குவித்தல் பாறு கழுகுகளுக்கு தீங்கு விளைவிக்காத பால் கூட்டுறவு சங்கங்களை உருவாக்குதல்

- இதைக் கண்காணிப்பது கடினம். பொய் சான்றிதழ் வழங்க வாய்ப்புள்ளதால் இதை நடைமுறைப்படுத்த தகுந்த முன்னேற்பாடுகளைச் செய்யவேண்டும் என யோசனை தெரிவிக்கப்பட்டது.

6. பாலூட்டிகளின் பிரேத பரிசோதனை குறித்த சட்டங்களை வன உயிரினங்கள் பயன்பெறும் வண்ணம் மாற்றியமைத்தல்.

- காட்டுக்கு அருகில் உள்ள ஊர்களில் வளர்ப்பு மாடு இயற்கையாக இறந்தாலும் அவற்றைப் புதைக்காமல் வனத்துறை கால்நடை மருத்துவரின் ஒப்புதலோடும் ஆலோசனையுடனும் எடுத்துச் சென்று இரையாக்கவும் வேண்டுகோள் விடப்பட்டது. ஆயினும் இந்தக் கருத்து பங்கேற்பாளர்களால் முழுமையாக ஏற்றுக்கொள்ள இயலவில்லை. இதைத் தகுந்த முன்னெச்சரிக்கையுடன் அனுகுமாறு யோசனை தெரிவிக்கப்பட்டது

- பிரேத பரிசோதனைக்கு பிறகு தொற்று நோய் ஏதேனும் உள்ளதா என ஆராய்ந்து அதன் அடிப்படையில் புதைப்பதா அல்லது அப்படியே மற்ற வன உயிரினங்களுக்கு உணவாக விடுவதா எனத் தீர்மானிக்க வேண்டும் எனவும் யோசனை தெரிவிக்கப்பட்டது.

7. பாறுகளுக்குத் தீங்கு விளைவிக்கும் மருந்துகளின் எச்சம் கால்நடைகளின் சடலங்களில் இருக்கிறதா என்பது குறித்து ஆய்வுமேற்கொள்ளுதல் - எச்சரிக்கை நடவடிக்கை எடுத்தல். முதல் கட்டமாக முதுமலை, சத்தியமங்களம் சரணாலயங்களுக்கு அருகில் இறந்த கால்நடைகளிலிருந்து திசு மாதிரி எடுத்து அதில் தீங்கு பயக்கும் மருந்துகளின் எச்சம் இருக்கிறதா என்பதை கூர்ஆய்வு மேற்கொள்ளல்.

- இது தொடர்பாக கால்நடை அறிவியல் பல்கலைக்கழகத்தின் கீழ் இயங்கும் PHARMACOVIGILANCE LABORATORY FOR ANIMAL FEED AND FOOD SAFETY (PLAFF) அமைப்பை அனுக யோசனை தெரிவிக்கப்பட்டது.

- இறந்த கால்நடைகளின் மாதிரிகளையும் சோதனை செய்வது அவசியம் எனவும் குசராத் மாநிலத்திலிருந்து ஆய்விற்க்காக இறந்த கால்நடைகளின் மாதிரிகளை சலீம் அலி பறவையியல் மையத்திற்கு அனுப்பிவருகின்றனர் என ஆராய்ச்சி மாணவி கிருபானந்தினி தெரிவித்தார்.

-Forensic lab ஆய்வகங்களுக்கு அனுப்பி ஆய்வு முடிவுகளை வெளியிட வேண்டும். அதை அருகிலுள்ள பஞ்சாயத்துகளுக்கும் தெரியப்படுத்த வேண்டும் என யோசனை தெரிவிக்கப்பட்டது

- இறந்த கால்நடைகளை அப்படியே விடுவதில் உள்ள சிக்கலும் விவாதிக்கப்பட்டது. இது எந்தளவு பாதுகாப்பானது. இதை நாம் எப்படி உறுதி செய்யப்போகிறோம் என்பதில் கவனம் தேவை என யோசனை தெரிவிக்கப்பட்டது.

8. மாயாறு படுகையை Section 26 A (1) (b) of Wildlife (Protection) Act 1972 Central Act 53 of 1972 கீழ் நீலகிரி வடக்கு வனக்கோட்டத்துடன் இணைத்துத் தனி சரணாலயமாக உருவாக்குதல்.

- தரவுகளை சேகரித்து proposal தயார்படுத்த வேண்டும். இதற்கான உதவிகளை வழங்க திரு. சுப்பிரமண்யா முன்வந்தார்.

- ஆயினும் தற்போது நீலகிரி வடக்கு வனக்கோட்டம் முதுமலையோடு இணைக்கப்பட்டதால் இதற்கான தேவை இருக்கிறதா என்பதும் ஐயத்தையும் மோகன்ராஜ் அவர்கள் தெரிவித்தார்.

9. பாறு கழுகுகளைக் காணச் சுற்றுலாத் திட்டம் முன்வைக்கப்பட்டது

- இது வேண்டாம் என தியோடர் பாஸ்கரன் வலியுறுத்தினார்.

10. பால்காரர்கள் அவசர அவசரமாக ஒவ்வொரு வீடாகச் சென்று பால் கறக்கும்போது ஒரு மாட்டிலிருந்து மற்றொரு மாட்டுக்கு நோய்பரவுவதைத் தவிர்க்கவும் மடிவீக்கம் போன்ற நோய்களைக் கட்டுப்படுத்தவும் பால்காரர்களுக்கு விழிப்புணர்வூட்டலாம் என்று கால்நடை மருத்துவர்கள் யோசனை தெரிவித்தனர். மேலும் கால்நடைத்துறை ஊழியர்கள் அனைவருக்குமே பயிற்சி வழங்குவதும் சிறப்பாய் இருக்கும் எனவும் தெரிவித்தனர்.

11. விழிப்புணர்வூட்டும் நடவடிக்கையினை தன்னார்வமாகத் தொண்டு நிறுவனங்கள் மேற்கொள்வதே சரி எனவும் அந்த வேலைத்திட்டத்தை அரசிடம் எதிர்பார்க்கத் தேவையில்லை எனவும் யோசனை தெரிவிக்கப்பட்டது

12. முதலில் Eco Sensitive Zone வரையறை செய்தபின்தான் அந்த செயல்திட்டம் குறித்துப் பேச முடியும் என்று தெரிவித்தனர்.

# தமிழ்நாட்டிலுள்ள பாறு கழுகுகளை மீளமைக்கும் செயல் திட்டம்
# (வரைவு அறிக்கை)



# தமிழ்நாட்டிலுள்ள பாறு கழுகுகளை மீளமைக்கும் செயல் திட்டம், (வரைவு அறிக்கை)

சு. பாரதிதாசன், அருளகம்

அழிவின் விளிம்பிலிருந்து பாறு இனப் பறவைகளை மீட்டு அவை வாழ்வாங்கு வாழப் பாதுகாப்பான சூழலை உருவாக்கவும் இறந்ததைத் தின்று இருப்பதைக் காக்கும் அவற்றின் பணி தொடரவும் தொலைநோக்குப் பார்வையுடன் சில செயல்திட்டங்களை வகுத்துள்ளோம். இதனைச் செயல்படுத்த உங்களது ஆதரவினைக் கோருகிறோம். கருத்துக்களையும் வரவேற்கிறோம்.

| நோக்கம் | செயல்பாடுகள் | பொறுப்பாளர் | முன்னுரிமை |
|---|---|---|---|
| 1. டைக்குளோபினாக் மருந்தைத் தடைசெய்தது போன்றே பாறு களுக்குத் தீங்கு விளைவிக்கக் கூடிய பிற மருந்துகளான கீட்டோபுரோபென், அசிக்குளோபினாக், புளூனிக்ஸின், மற்றும் நிமுசிலாய்ட்ஸ் ஆகியவற்றையும் கால்நடைப் பயன்பாட்டிற்கு முற்றிலுமாகத் தடை செய்வது. | 1.1. மருந்து மற்றும் ஒப்பனைப் பொருட்கள் சட்டம் (1940 ஆம் ஆண்டு) பிரிவு 26 A அறிவிக்கை எண் 499 (E)- இன் கீழ் பாறுகளுக்குத் தீங்கு விளைவிக்கக்கூடிய மருந்துகளைக் கால்நடைகளின் பயன்பாட்டிற்குத் தயாரிக்கவும் விற்பனை செய்யவும் தடைவிதித்து அரசிதழில் (கெஜட்) வெளியிடல். | மருந்து கட்டுப்பாட்டு ஆளுநர் அவர்கள், மக்கள் நலவாழ்வு - குடும்ப நலத்துறை, நடுவண் அரசு. | அவசரம் |
| | 1.2 அரசு கால்நடை மருந்தகங்களுக்கு பாறுகளுக்குத் தீங்கு விளைவிக்கக்கூடிய மருந்துகளை வாங்குவதை நிறுத்த உத்தரவிடுதல். | 1.அரசு முதன்மைச் செயலாளர் - இயக்குநர், கால்நடைத் துறை 2.அரசு முதன்மைச் செயலாளர், மக்கள் நலவாழ்வு - குடும்பநலத் துறை, மருத்துவப் பணிகள் கழகம். | அவசரம் |
| 2. பாறுகளின் அழிவைச் சூழல் பேரிடராக வரையறுப்பது | 2.1. பாறுகளின் அழிவைத் தேசியப் பேரிடர் மேலாண்மை சட்டம் 2005, பிரிவு 62- இன் படி தேசியச் சூழல் பேரழிவாக அறிவிப்பது.<br><br>2.2. அதன்படி தேசிய, மாநில மற்றும் மாவட்ட அளவில் செயல் திட்டங்களை ஏற்படுத்துதல் மற்றும் அதற்குரிய செயலாக்க நிதி ஒதுக்கீடு செய்வது | 1. செயலர்கள், உள்துறை அமைச்சகம், நடுவண் அரசு 2.பேரிடர் மேலாண்மைத் துறை, மாநில அரசு | கவனம் |

| நோக்கம் | செயல்பாடுகள் | பொறுப்பாளர் | முன்னுரிமை |
|---|---|---|---|
| *3.* தடைசெய்யப்பட்ட டைக்குளோபினாக் மருந்து கால்நடைகள் பயன்பாட்டிற்கு கிடைக்காவண்ணம் தடுப்பது | *3.1.* மருந்துக் கட்டுப்பாட்டுத் துறை துணை இயக்குநர் அவர்கள் மருந்து ஆய்வாளர்களைக் கொண்டு - மேற்கண்ட மாவட்டங்களில் மருந்துக் கடைகளில் தீடீர் சோதனை மேற்கொள்ளவும் - மருந்துக் கடைகளிடம் டைக்குளோபினாக் மருந்து விற்பனை குறித்த மாதாந்திர அறிக்கையினை (மருந்தைப் பரிந்துரைத்த மருத்துவர் பெயர், அவரின் பதிவு எண், அடையாள எண், வாங்கிச் சென்றவரின் பெயர் உள்ளிட்ட தகவல்களைப் பெற்று அதை மாவட்ட ஆட்சித் தலைவரிடம் ஒப்படைத்து கண்காணிக்கக் கேட்டுக் கொள்ளுதல்.<br><br>*3.2.*.இதை மூன்று மாதங்களுக்கு ஒரு முறை கூடி ஆய்வு செய்தல்<br><br>*3.3.* ஒழுங்குதவறும் கடை மீதும் மருத்துவர்கள் மீதும் மருந்து மற்றும் ஒப்பனைச் சட்டம் 1940-இன் கீழ், பிரிவு 28 ஆ ன் கீழ் நடவடிக்கை எடுத்து அதை நாளிதழ்களிலும் செய்தியாக வெளியிடல் | 1. அரசு முதன்மைச் செயலாளர், மக்கள் நலவாழ்வு - குடும்பநலத்துறை, மருத்துவப் பணிகள் கழகம்.<br><br>2. மூன்று மாவட்ட ஆட்சித்தலைவர்கள் | அவசியம் |

| நோக்கம் | செயல்பாடுகள் | பொறுப்பாளர் | முன்னுரிமை |
|---|---|---|---|
| 4. வருமுன் காப்போம் நடவடிக்கையையும் கால்நடைகளுக்கான இயற்கை மருத்துவத்தையும் ஊக்குவித்தல் | 4.1. மடிவீக்கம் போன்ற நோய்களுக்கு வலிபோக்கும் மருந்துகள் அதிகளவில் பயன்படுத்தப்படுகின்றன. எனவே, இந்நோய் வராமல் பராமரிக்கும் நடவடிக்கையினை கால்நடை வளர்ப்போரிடம் எடுத்துரைத்துப் பயிற்சி வழங்குதல்.<br><br>4.2. பாரம்பரிய கால்நடை மூலிகை மருத்துவத்தையும் தேவைக்குத் தக்கபடி ஊக்குவித்தல். | 1. அரசு முதன்மைச் செயலாளர், கால்நடைத் துறை<br><br>2. இயக்குநர், கால்நடைத் துறை<br><br>3. பொது மேலாளர், ஆவின்<br><br>4. பேராசிரியர், மாவட்ட அளவிலான கால்நடை அறிவியல் பல்கலைக்கழகம் | அவசியம் |
| 5. பாறு கழுகுகள் வாழும் நீலகிரி, ஈரோடு, திருப்பூர், கோவை உள்ளிட்ட மாவட்டங்களில் பாதுகாப்பான மாற்று மருந்தான மெலாக்சி கம் மருந்து தட்டுப்பாடு ஏற்படாவண்ணம் தேவையான அளவு இருப்பு வைத்தல் | இணை இயக்குநர்கள் (நீலகிரி, ஈரோடு, திருப்பூர், கோவை) பாதுகாப்பான மாற்று மருந்தான மெலாக்சிகம் இருப்பை உறுதி செய்தல். | 1. அரசு முதன்மைச் செயலாளர், கால்நடைத் துறை<br><br>2. இயக்குநர், கால்நடைத் துறை<br><br>3. மூன்று மாவட்ட இணை இயக்குநர்கள் | அவசரம் |
| 6. பாதுகாப்பான மாற்று மருந்தான மெலாக்சிகம் மருந்தின் தரத்தை உறுதிசெய்தல். | மெலாக்சிகம் மருந்து நன்றாக வேலை செய்ய ஏற்றதாக அதன் வீரியம் 5mg/ml என்பதற்குப் பதிலாக 20 mg/ml என்ற அளவில் வீரியம் அதிகம் உடையதைக் கொள்முதல் செய்தல் | 1. அரசு முதன்மைச் செயலாளர் கால்நடைத் துறை<br><br>2. இயக்குநர், கால்நடைத் துறை | அவசியம் |

| நோக்கம் | செயல்பாடுகள் | பொறுப்பாளர் | முன்னுரிமை |
|---|---|---|---|
| 7.பாறுகளுக்குத் தீங்கு விளைவிக்கும் மருந்துளின் எச்சம் கால்நடைகளின் சடலங்களில் இருக்கிறதாஎன்பது குறித்து ஆய்வு மேற்கொள்ளுதல் - எச்சரிக்கை நடவடிக்கை எடுத்தல் | 7.1. நீலகிரி, ஈரோடு, கோவை, திருப்பூர் ஆகிய மாவட்டங்களில் உள்ள கூஅமீக்நஅகு உதவியுடன் ஆய்வு மேற்கொள்ள அரசு உத்தரவு பிறப்பித்தல்.<br><br>7.2. மேற்கண்ட பணியினை மேற்கொள்ள தனிக்குழு அமைத்தல் அதற்கான நிதி ஒதுக்கீடு செய்தல். | 1. அரசு முதன்மைச் செயலாளர், கால்நடைத் துறை<br><br>2. இயக்குநர், கால்நடைத்துறை<br><br>3. மூன்று மாவட்டத்தைச் சேர்ந்த VETERINARY UNIVERSITY TRAINING AND RESEARCH CENTRE பேராசிரியர்கள்<br>4. வன உயர் ஆராய்ச்சியகம், வண்டலூர் | கவனம் |
| 8. பாறுகளுக்குக் கேடுபயக்கும் டைக்குளோபினாக் மற்றும் இதர மருந்துகளைப் பயன்படுத்தாமல் இருக்கும்படி பால் கூட்டுறவுச் சங்கங்களை ஊக்குவித்தல் | 8.1. டைக்குளோபினாக், அசிக்குளோபினாக், புளூநிக்சின், கீட்டோபுரோபேன் மருந்துகளைக் கறவை மாடுகளுக்கு அறவே புறக்கணிக்கக் கால்நடை மருத்துவர்களுக்கும் கால்நடை வளர்ப்போருக்கும் அறிவுறுத்தல்<br><br>8.2. ஆவின் செயலர்களின் மாதாந்திரக் கூட்டத்தில் இது பற்றி விவரித்தல் | ஆவின் பொது மேலாளர் - பால் ஆய்வாளர்கள் | அவசியம் |



| நோக்கம் | செயல்பாடுகள் | பொறுப்பாளர் | முன்னுரிமை |
|---|---|---|---|
| 9.பாலூட்டிகள் பிரேத பரிசோதனை குறித்த சட்டங்களை வன உயிரினங்கள் பயன்பெறும் வண்ணம் மாற்றியமைத்தல். | 9.1. பாதுகாக்கப்பட்ட வனப்பகுதியிலும் வனப்பகுதியை ஒட்டிய ஊர் ஓரங்களிலும் யானை, காட்டெருது, மான், மாடு உள்ளிட்ட உயிரினங்கள் இறக்க நேர்ந்தால் அவற்றைப் பிரேத பரிசோதனை செய்தபின் கால்நடை மருத்துவரின் ஒப்புதலோடும் ஆலோசனையுடனும் அதனை எடுத்துச் சென்று புதைக்காமலும் எரிக்காமலும் இறந்த விலங்குகளை உண்ணும் காட்டுயிர்களுக்கு இரையாக விட வேண்டுதல்<br><br>9..2.. தமிழ்நாடு அரசு அதிகாரத்தின் கீழ் துணை விதி (2) பிரிவு 64 காட்டுயிர் (பாதுகாப்பு) ச ட்டம், 1972 (நடுவண் சட்டம் 53 of 1972) -இன் கீழ் ஒழுங்கு விதி இயற்ற வேண்டுதல்<br><br>9.3. வனங்களின் அருகாமையில் உள்ள ஊர்களில் இயற்கையாக இறக்கும் கால்நடைகளையும் சாலையில் அடிபட்டு இறக்கும் விலங்குகளையும் கால்நடை மருத்துவரின் ஆலோசனைப்படி எடுத்துச் சென்று இறந்த சடலங்களை உண்ணும் காட்டுயிர்களுக்கு இரையாக்க வேண்டுதல்<br><br>9.4. இறந்த விலங்குகளின் அருகில் கண்காணிப்புக் கேமரா பொருத்துதல் மற்றும் பாறுகளின் எண்ணிக்கையினைக் கண்காணித்தல்<br><br>9.5. மேற்கண்ட செயல்பாட்டிற்குத் தேவையான நிதி ஆதாரத்தை வழங்க வேண்டுதல். | 1. அரசுத் துறைச் செயலர், வனத்துறை<br><br>2. முதன்மை வன உயிரினப் பாதுகாவலர்<br><br>3. வன உயர் ஆராய்ச்சியகம், வண்டலூர் | அவசியம் |

| நோக்கம் | செயல்பாடுகள் | பொறுப்பாளர் | முன்னுரிமை |
|---|---|---|---|
| 10. எதிர்பாராத விதமாக பாறு கழுகுகள் இறக்க நேர்ந்தால் அவற்றைப் பிரேத பரிசோதனைக்கு உட்படுத்தல் மற்றும் அதற்குத் தேவையான நடைமுறையை எளிதாக்குதல். | 10.1. பாறு கழுகுகள் பாதுகாப்பு பட்டியலில் முதல் இடத்தில் இடம் பெறுவதைக் கருத்தில் கொண்டு அவை இறக்க நேரிட்டால் கட்டாயம் பிரேத பரிசோதனை செய்ய வேண்டும் என்று வன ஊழியர்களுக்கு அறிவுறுத்த வேண்டுதல்.<br><br>10.2. இறந்த பறவையின் மாதிரியைச் சேகரித்து அதை BNHS/ SACON / IVRI/ TANUVAS உள்ளிட்ட நிறுவனங்களுக்கு அனுப்பி அதில் கேடு பயக்கும் மருந்துகளின் எச்சம் இருக்கிறதா என்பதைப் பார்க்க உறுதி செய்திட அறிவுறுத்தல்<br><br>10.3 .பிரேத பரிசோதனையின் முடிவை கிராம பஞ்சாயத்துகளுக்குத் தெரிவித்தல் மற்றும் நாளிதழில் வெளியிடல். | 1.அரசுத் துறைச் செயலர், வனத்துறை,<br><br>2. முதன்மை வனப் பாதுகாவலர்.<br><br>3. தலைமை வன உயிரினப் பாதுகாவலர்<br><br>4. வன உயர் ஆராய்ச்சியகம்.<br><br>5. Avian Disease Laboratory/ Centralized Clinical Laboratory& Madavaram, Chennnai. | அவசரம் |
| 11. முதுமலை, சத்தியமங்களம் சரணாலயங்களுக்கு அருகில் இறந்த கால்நடைகளிலிருந்தும் திசு மாதிரி எடுத்து அதில் தீங்கு பயக்கும் மருந்துகளின் எச்சம் இருக்கிறதா என்பதை கூர் ஆய்வு மேற்கொள்ளல் | சோதனை செய்வதற்குத் தேவையான நடைமுறைகளை வன உயர் ஆராய்ச்சியகம், வண்டலூர், SACON, கோயமுத்தூர் மற்றும் MoEFCC உதவியுடன் மேற்கொள்ளுதல் | 1.அரசுத் துறைச் செயலர், வனத்துறை,<br><br>2. முதன்மை வனப் பாதுகாவலர்<br><br>3. தலைமை வன உயிரனப் பாதுகாவலர் | கூடுதல் கவனம் |

| நோக்கம் | செயல்பாடுகள் | பொறுப்பாளர் | முன்னுரிமை |
|---|---|---|---|
| *12.* பாறு கழுகுகளின் வாழிடத்தைப் பாதுகாத்தல். | மாயாறு படுகையை Section 26 A (1) (b) of Wildlife (Protection) Act 1972 Central Act 53 of 1972 கீழ் நீலகிரி வடக்கு வனக் கோட்டத்துடன் இணைத்துத் தனி சரணாலயமாக உருவாக்குதல். | 1.அரசுத் துறைச் செயலர், வனத் துறை,<br><br>2. முதன்மை வனப் பாதுகாவலர் - தலைமை<br><br>3. முதன்மை வன உயிரினப் பாதுகாவலர் | கவனம் |
| *13.* பாறு கழுகுகள் மாநில எல்லைகளைத் தாண்டி பறந்து செல்லும் என்பதால் கேரளம், கர்நாடகம், தமிழ்நாடு உள்ளிட்ட மாநிலங்களைக் கொண்ட ஒரு ஒருங்கிணைப்புக் குழு உருவாக்குதல். | ஆறுமாதத்திற்கு ஒரு முறை மூன்று மாநிலத் தலைமை வன உயிரினப் பாதுகாவலர்களும் கூடி அழிவின் விளிம்பிலிருக்கும் பாறு இனத்தைக் காக்கத் தேவையான நடவடிக்கை மேற்கொள்ள இணைந்து செயல்படுதல். | தலைமை வன உயிரினப் பாதுகாவலர்கள் (தமிழ்நாடு, கேரளம், கர்நாடகம்) | கவனம் |



| நோக்கம் | செயல்பாடுகள் | பொறுப்பாளர் | முன்னுரிமை |
|---|---|---|---|
| 14. பாறு கழுகுகளின் வாழிடங்களைக் கண்காணிக்கவும் பாதுகாக்கவும் பரப்புரை செய்யவும் பொது நிதி உருவாக்குதல் | 14.1. WII - இன் துணையுடன் கண்காணிப்புப் பட்டையைப் பொருத்திப் பாறு இனத்தின் வாழிடத்தையும் விரவல் குறித்த தகவல்களை செயற்கைக்கோள் உதவியுடன் சேகரிக்கவும் - கண்காணிக்கவும் அனுமதி வழங்கி உத்தரவிடக் கோருதல்.<br><br>14.2. வனப் பணியாளர்களுக்கு பாறு கழுகுகள் தொடர்பான பயிற்சி தருதல்.<br><br>14.3.. கூடுகள் அமைத்துள்ள இடங்களைத் தொடர் கண்காணிப்பு மேற்கொள்ளவும் தகுந்த அறிவுரை வழங்கல்.<br><br>14.4. பழங்குடியினைரைக் கொண்டு பாறு பாதுகாவலர்களை நியமிக்க ஆணையிட வேண்டுதல்.<br><br>14.5. மேலும் அவர்களைக் கொண்டு காட்டுத்தீ போன்றவற்றிலிருந்தும் பிற கேடுகளிலிருந்தும் பாறு கழுகுகளின் வாழிடம் பாதிக்காவண்ணம் விழிப்புடன் கண்காணிக்க உத்தரவிடல்.<br><br>14.6. பன்னாட்டு பாறு கழுகுகள் விழிப்புணர்வு நாளை ஆண்டுதோறும் கடைபிடிக்கவும் வேண்டுதல்.<br><br>14.7. மற்றும் மேற்கண்டவற்றிற்குத் தேவையான நிதி ஒதுக்கீடு செய்ய வேண்டுதல். | 1. அரசு முதன்மைச் செயலாளர், வனத்துறை.<br><br>2. முதன்மை வனப் பாதுகாவலர்.<br><br>3. தலைமை வன உயிரினப் பாதுகாவலர். | கூடுதல் கவனம் |

| நோக்கம் | செயல்பாடுகள் | பொறுப்பாளர் | முன்னுரிமை |
|---|---|---|---|
| *15.* இறந்த சடலங்களின் மீது விசம் தடவி வன உயிரினங்களை அழிக்க முற்படுதலைத் தடுத்தல் | *15.1.* இதற்கெனத் தனிப்படை அமைக்க உத்தரவிட வேண்டுதல்.<br><br>*15.2.* அவர்களைக் கொண்டு வனத்திற்கு அருகே உள்ள ஊர்களில் கால்நடைகள் இறப்பு (இயற்கை - செயற்கை மரணம்) குறித்துப் பதிவு செய்தல்.<br><br>*15.3.* புலி தாக்கி மாண்ட கால்நடைகளுக்கான இழப்பீட்டை ஒற்றைச் சாளர முறையில் உடனே வழங்க வேண்டுதல். | 1.அரசு முதன்மைச் செயலாளர், வனத்துறை<br><br>2. முதன்மை வனப் பாதுகாவலர்<br><br>3. தலைமை வன உயிரினப் பாதுகாவலர்<br><br>4. வன உயர் ஆராய்ச்சியகம், வண்டலூர் | கூடுதல் கவனம் |
| *16.* பாறு திட்டம் (Project Vulture) செயல்படுத்துதல் | *16.1.* புலிகள் திட்டத்தைப் போன்று உணவுச் சங்கிலியின் உச்சத்தில் இருக்கும் பாறு இனத்தைப் பாதுகாக்கத் தனியாக திட்டம் ஒன்றைச் செயல்படுத்த வேண்டுதல்<br><br>*16.2.* ஒருங்கிணைக்கப்பட்ட பாறு கணக்கெடுப்பு ஆண்டுதோறும் இரண்டு முறை மேற்கொள்ள வேண்டுதல்<br><br>*16.3.* அதற்கான நிதி ஆதாரம் வழங்கக் கோருதல் | 1. அரசு முதன்மைச் செயலாளர், வனத்துறை<br><br>2. முதன்மை வனப் பாதுகாவலர்<br><br>3. தலைமை வன உயிரினப் பாதுகாவலர்<br><br>4. வன உயர் ஆராய்ச்சியகம் | கவனம் |

# சூழல் தாங்கும் மண்டலம் (Eco-Sensitive Zone)

| வ.எ. | செயல்பாடு | தடைசெய்யப்பட்டது/ ஒழுங்குபடுத்தப்பட்டது/ அனுமதிக்கப்பட்டது | குறிப்பு |
|---|---|---|---|
| 1. | வணிக நோக்கில் சுரங்கம் தோண்டுதல் | தடை | கருங்கழுத்துப் பாறு தங்குவதற்கும் கூடமைக்கவும் பாறை இடுக்குகளைப் பயன்படுத்துகின்றன. எனவே, மாயாறு படுகை, எப்பநாடு, கொடநாடு உள்ளிட்ட இடங்களில் எவ்விதச் சுரங்க நடவடிக்கையும் முற்றாகத் தடைசெய்யப்படுகிறது. |
| 2. | ஆற்றோரங்களிலும் மலைச்சரிவுகளிலும் வளர்ச்சி என்ற பெயரில் நடைபெறும் வாழிட தகர்ப்புகள் | தடை | நீலகிரி வடக்கு வனக் கோட்டத்தில் ஆற்றுப் படுகைகளையும் மலை முகடுகளையும் வெண்முதுகு பாறு பறவைகள் தங்குவதற்கும் கூடமைக்கவும் பயன்படுத்துகின்றன. எனவே அங்குக் கட்டுமானப் பணிகள் உள்ளிட்ட மேம்பாட்டு நடவடிக்கைகள் முற்றாகத் தடை செய்யப்படுகிறது. |
| 3. | சாலை உருவாக்கம் | தடை | பாறு பறவைகள் கூடமைத்துள்ள இடத்திற்கு அருகில் அணுகு சாலையோ சாலை அமைப்பதோ கூடாது. (குறிப்பாகச் சிறியூர் அருகில்). |
| 4. | மரம் வெட்டுதல் | ஒழுங்குபடுத்தப்பட்டது | பாறு கூடமைத்த மரங்களை வனத்திற்குள்ளும் வனத்திற்கு வெளியேயும் தனியார் நிலத்திலிருந்தாலும் வெட்டுவதற்குத் தடை செய்யப்படுகிறது. |
| 5 | காற்றாலை அமைத்தல் | தடை | காற்றாலையின் விசிறியில் அடிபட்டு இறக்கை முறிவதைத் தவிர்க்கும் பொருட்டு முதுமலையைச் சுற்றிலும் 100 கி.மீ. சுற்றளவிற்குக் காற்றாலை அமைக்கத் தடை விதிக்கப்படுகிறது. |

| வ.எ. | செயல்பாடு | தடைசெய்யப்பட்டது/ ஒழுங்குபடுத்தப்பட்டது/ அனுமதிக்கப்பட்டது | குறிப்பு |
|---|---|---|---|
| 6 | உயர்மின் அழுத்த மின் கம்பி அமைத்தல் | தடை | பூதநத்தம் பகுதியில் உயர் மின் அழுத்த மின் கம்பி செல்கிறது. இது பாறு பறவை கூடமைத்த இடத்திற்கு வெகு அருகில் உள்ளது. எனவே இந்தக் கம்பியைத் தரைக்கடியில் புதைத்தோ கம்பியைச் சுற்றிலும் மின்சாரம் தாக்கா வண்ணம் வளையமிட்டோ கொண்டு செல்ல ஏற்பாடு செய்ய வேண்டும். |
| 7 | நோய்வாய்ப் பட்ட கோழிக் கழிவுகளை முறையாக அப்புறப்படுத்துதல் | ஒழுங்குபடுத்தப்பட்டது | நோய்வாய்ப்பட்ட கோழிக் கழிவுகளிலிருந்து நோய் பரவா வண்ணம் அக் கழிவுகளை முறையாக அகற்றுவது. குறிப்பாக மசினகுடியிலிருந்து சிங்காரா செல்லும் வழியில் உள்ள குப்பைக் கிடங்கைத் தொடர்ந்து கண்காணிப்பது |
| 8 | சுற்றுலா | ஒழுங்குபடுத்தப்பட்டது | பழங்குடியினருடன் இணைந்து சுற்றுலாப் பயணிகளை அழைத்துச் சென்று பாறு உள்ளிட்ட பறவைகளைக் காண்பிக்க ஏற்பாடு செய்யலாம் |
| 9 | கழுகுகளுக்கு கேடுபயக்கும் மருந்துகளை விற்பனை செய்தல் | தடை | அசிக்குளோபினாக், கீட்டோபுரோபேன், புளூநிக்சின், நிமிசிலாய்ட்ஸ் ஆகிய மருந்துகளை முதுமலை மற்றும் சத்தியமங்களம் சரணாலயங்களுக்கு அருகில் உள்ள மருந்துக் கடைகளில் கால்நடைகள் பயன்பாட்டிற்கு விற்பனை செய்ய முற்றாகத் தடை விதித்தல் |
| 10 | கோயில் திருவிழா | ஒழுங்குபடுத்துதல் | சிறியூரில் பாறு கழுகுகள் கூடமைத்துள்ள இடத்திற்கு கீழே நெருப்பு மூட்டுவதோ மணி அடிப்பதோ வெடி வெடிப்பதோ தடை செய்யப்படுகிறது. |




Tamil Birders Meet 2017 Participants - Photo taken on Day 2 (22nd October 2017).
More images of this even can be seen at - https://www.flickr.com/photos/47196327@N03/sets/72157665394954389/with/24070410248/




**Support -** Partial financial support for this meet has been sponsored by Syndicate Bank. For the first time we have collected a registration fee (Rs. 500) from the participants to meet the expenses. However this nominal amount was not mandatory to attend this meet. About 100 partiticipants attended this meet.

**Team -** Various individuals have taken responsibilities for organizing this Tamil Birders Meet 2017.
**Fund raising**: K. V. Sudhakar
**Agenda preparation**: V. Santharam, Dr. T. Badrinarayanan, P. Jeganathan
**Venue in charge**: Tamil Selvan A, Ganeshwar S V, Selvaganesh K, K. V. Sudhakar and Dr. T. Badrinarayanan
**Communication**: P. Jeganathan, Rajarajan V, Ganeshwar S V and Selvaganesh K
**Minutes of the meeting (English)**: Abisheka Krishnagopal
**Minutes of the meeting (Tamil)**: Chezheyan J
**Registration**: Rajarajan V, Ganeshwar S V, Tamil Selvan A
**Overall coordination and organizing**: K. V. Sudhakar and P. Jeganathan
**Report compiled by**: P. Jeganathan
**Photos**: Syed Abdul Kadhar and P. Jeganathan
**Email**: tnebirder@gmail.com

# TAMIL BIRDERS MEET 2017 – LIST OF PARTICIPANTS

A

ABHISHEKA KRISHNAGOPAL
ABINAND REDDY
AJESH A
AMIT ANDREY
AMSA
ANDREW JEROME
ANISH KUMAR S.C
ARJUN SHANMUGASH S.C
ARULVELAN. T
ASAITHAMBI
AVIRAL S

B

BAKYARAJ S
BHANUMATHI. B
BHARATHIDASAN

C

CHEZHEYAN J

D

DEEPANKUMAR T
DEVIKA RANI
DIPU K
DIVYAPRIYA CHANDRASEKARAN

G

GANESHWAR SV
GEORGE TOM
GOKUL VADIVEL
GOWTHAM SANGAVI R

H

HARIKRISHNAN R
HARIKRISHNAN S
HARISH CHANDRA
HARSITA M

J

JAYASANKAR. S
JEGANATHAN. P
JOSEPH
JUSTUS OBED. L

K

KALIDASS SHANMUGHAM
KANNAN AS
KAVITHA V
KIRUBHANANDHINI. V

L

LATHA S

M

MADHESHWARAN K
MAGESH.P
MANIKANDAN.V
MASILAMANI SELVAM
MIRNALINI
MOHAN RAJ
MURALIDHARAN
MURALIKRISHNAN V
MURUGESHAN. N
MUTHUKRISHNAN. V
MYTHEESWARAN T

N

NEETHIDOSS
NIVEDITHA RK

P

PALANI.K
PARANTHAGAN
PARIPOORANAM
PRABHAKAR S
PRAVEEN
PRIYADARSHINI

R

RAGHAV V
RAJAN. S S
RAJANGAM P
RAJARAJAN V
RAMESH KULANDAIVEL
RAMESH KUMAR S
RAVEENDRAN. N
RAVI. M
RAVINDRANATH E H

S

SAKTHIVEL T
SALLY JOB
SANKARASUBRAMANIAN. N
SANTHARAM V
SANTHOSH R
SARAVANAN
SATHYA NARAYANAN.S
SEKAR . V
SELVAGANESH K
SENTHIL KUMAR. S
SHYAMAL L.
SIVA T
SIVAKUMAR
SIVAKUMAR KS
SIVAKUMAR. R
SREEKUMAR C
SREEVAISHANAVI
SUBRAMANIA SIVA. S
SUBRAMANYA. S
SUDHAKAR V
SUHEL QUADER
SUHIRTHA MUHIL M
SURENDHAR BOOBALAN
SWATI S
SYED ABDUL KADHAR

T

TAMIL SELVAN A
TAMILINIYAN D
THEODORE BASKARAN
THIYAGARAJAN
THYAGARAJAN. S

V

VASANTHARAJAN. P. M
VENKATARAMANAN
VENKATESAN M
VENKATRAMAN R
VIGNESHWARAN. B
VIKRAMKUMAR.V
VINOTH KUMAR. N

Y

YOGESHWARAN S

